THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

மார்ச்
2006
மரம் 6
கனி 4

## FORM IV

| | |
|---|---|
| 1. Place of Publication | : Batlagundu. |
| 2. Periodicity of its Publication | : Monthly. |
| 3. Printer's Name | : R.Sathiyamoorthi. |
| 4. Address | : 14/13/24 Melamanthai st., Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |
| 5. Whether citizen of India | : Yes. |
| 6. Publisher's Name | : B.Arjunan. |
| 7. Address | : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |
| 8. Editor's Name | : B.Arjunan. |
| 9. Address | : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |

I, B.Arjunan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.


sd


Date:28.02.2006 Signature of Publisher.



# கிறிஸ்துவின் சபையார் வழங்கும்
# கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி

உங்கள் WIN TV -யில்
ஒவ்வொரு வாரமும் திங்கள்,
செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி
காலை 6.15 முதல் 6.30 மணி வரை
பாருங்கள். மற்றும்




உங்கள் வானொலியில் இலங்கை ஆசிய சேவை 49 மீட்டரில், ஒவ்வொரு வியாழன் மாலை 6.15 முதல் 6.30 மணி வரை கேளுங்கள்.

**THE WORD OF CHRIST**
P.O.BOX.5
BATLAGUNDU -624 202 S.INDIA
Phone: 04543 263278 Cell: 9443558041

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15

"The Churches Of Christ salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

**மரம் - 6** **மார்ச் - 2006** **கனி - 4**


ஆசிரியருரை

## இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிற தேவன்

## God who calleth those things which be not as though they where



இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிற தேவன் சர்வ் சிருஷ்டிகர், சர்வ வியாபி, ஒருவராலும் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிற தேவன். அவர் இருக்கிறவராகவே இருக்கிறார். அவர் ஆலோசனை கர்த்தர், நித்திய பிதா, அவருடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை. இந்த தேவனை ஆபிரகாம் விசுவாசித்து விசுவாசிகளின் தகப்பனானான். "தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான்" என்று ரோமர்4:17-ல் வாசிக்கிறோம். ஆபிரகாம் காரானூரிலே குடியிருக்கிறதற்கு முன்னமே மெசொப்பொத்தோமியா நாட்டிலே இருக்கும்போது மகிமையின் தேவன் அவனுக்குத் தரிசனமாகி: நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா என்றார். அப்பொழுது அவன் கல்தேயர் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, காரானூரிலே வாசம் பண்ணினான். அவனுடைய தகப்பன் மரித்தபின்பு, அவ்விடத்தை விட்டு கானானுக்கு அழைத்துக்கொண்டுவந்து குடியிருக்கும்படி செய்தார். அதிலே ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய காணியாட்சிக்குக் கொடாமலிருக்கையில், அவனுக்குப் பிள்ளையில்லாதிருக்கும்போது: உனக்கும் உனக்குப்பின்வரும் உன் சந்ததிக்கும் இதைச் சுதந்தரமாகத் தருவேன் என்று அவனுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார்.

"உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான்

அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்" (ரோம.4:18). விசுவாசம் என்பது காணப்படாத ஒன்றை நம்புவது அதுவே விசுவாசம். இந்த விசுவாசத்தை உடையவனாக ஆபிரகாம் இருந்தான். அநேக ஜாதிகளுக்கு தகப்பனாவதற்குரிய சாத்தியக்கூறுகள் ஒன்றுமில்லாதிருந்தும் அதை நம்பி விசுவாசித்தான். அவன் வயதானவனாயிருந்தான் ஆனால் விசுவாச விஷயத்திலோ பெலனுள்ளவனாயிருந்தான். எப்படியென்றால் "அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறுவயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான்" (ரோம.4:19). நாம் அநேக விஷயங்களில் விசுவாச விஷயத்தில் பலவீனப்படுகிறோம். எப்படியென்றால் அது என்னால் நடக்குமா? தேவன் அதை எனக்குச் செய்வாரா? பிரியமானவர்களே ஆபிரகாமை இந்த இடத்தில் நன்கு கவனியுங்கள். தன் சரீரம் செத்துப்போனதையும், அவனுடைய மனைவியின் கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான். மகிமையின் தேவன், வல்லமையின் தேவன், தம்மோடு இருக்கிறார் என்ற அசையாத நம்பிக்கை அவனுக்குள் இருந்தது. இந்த நம்பிக்கை உங்களுக்குள்ளும் இருக்கவேண்டும். இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிற தேவன், ஒரு முறை எசேக்கியேல் தீர்க்கதரிசியை அழைத்து எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்குக்கு கொண்டு சென்று "மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா என்ற கேட்டார்;" (எசே.37:3). அதற்கு அவன்; கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர் என்றான். அவனைப் பார்த்து நீ இந்த எலும்புகளைக்குறித்து தீர்க்கதசிசனம் உரைத்து ஆவியை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், ஆவியே, நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்துவந்து, கொலையுண்ட இவர்கள்மேல் உயிரடையும்படிக்கு இவர்கள்மேல் ஊது என்று சொன்னவுடன், எசேக்கியேல் தனக்கு கற்பிக்கப்பட்டபடி தீர்க்கதரிசனம் உரைத்தான். அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள். அன்பானவர்களே உலர்ந்த எலும்புகள் இங்கு உயிரடைந்து பெரிய சேனையாய் நின்றது. "மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும்" (லூக்.18:27).

**ஆபிரகாமுடைய விசுவாசத்தில் நாம் கற்றுக்கொள்ளும் மற்றொருகாரியம்** "தேவனுடைய வாக்குத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்" (ரோம.5:20,21). வாக்குத்தத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவர் என்று கடுகளவும் சந்தேகப்படாமல் விசுவாசித்தான். இன்றைக்கு கர்த்தரை விசுவாசிக்கிற நாம் இந்த விதமான முழு நிச்சயமுடையவர்களாக இருக்கிறோமா? காலம் கடக்க கடக்க நம்முடைய விசுவாசம் சோர்ந்து போகிறது. ஆபிரகாம் வாக்குதத்தம் செய்த கர்த்தர் அதை

தம்முடைய வாழ்க்கையிலே நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி தேவனை மகிமைப்படுத்தினான். அப்படியென்றால், அவன் வாக்குதத்தமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் முன்பே தேவனை மகிமைப்படுத்துகிறவனாயிருந்தான். இன்று நாம் பெற்றுக்கொண்டால்தான் கர்த்தருக்கு நன்றி சொல்லுவோம். ஏன் எல்லோருமே அப்படித்தான். ஆபிரகாமோ "தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை" (லூக்.1:37) என்ற திருவசனத்தின் படி அவருடைய வாக்குத்தத்தங்களைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல் முழு நிச்சயமாய் நம்பி விசுவாசத்தில் வல்லவனானான். ஆபிரகாம் விசுவாச விஷயத்தில் வல்லவனாக இருந்தபடியால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது.

"அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது, அவனுக்காகமாத்திர மல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும். அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்" (ரோம.4:23-25). ஆபிரகாம் விசுவாசித்த அந்த தேவனை நீங்களும் விசுவாசிப்பீர்கள் என்றால், ஆபிரகாமின் மூலமாக விசுவாசத்தின் பிள்ளைகளாக மாற்றப்படுவீர்கள். நீங்கள் நீதிமான்களாக்கப்படுவதற்காக இயேசு உங்களுடைய பாவங்களுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டும் எழுப்பப்பட்டும் இருக்கிறார். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

"கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?" என்று ஆதி.18:14-ல் தேவதூதன் ஆபிரகாமைப்பார்த்து சொன்னான். எனக்கு அன்பான சகோதரனே சகோதரியே தேவனால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை. அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். ஆதியிலே தேவன் ஒன்றுமில்லாதிருக்கும்போது முதலாவது "தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று" (ஆதி.1:3). இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிறவர் இவைகளை உண்டாக்கினார். இப்படியே ஆறுநாளும் தேவன் வானத்தையும் சகலத்தையும் படைத்தார் என நாம் ஆதியாகம புத்தகத்திலே வாசிக்கலாம். மரித்துப்போனவர்க்ளை நாம் திரும்ப பெறமுடியாது. அவர்கள் உலகத்திலே இல்லாது போகிறார்கள். ஆனால் மரித்துப்போன லாசருவை ஆண்டவராகிய இயேசு எழுப்பினார். அவர் லாசருவை எழுப்பப்போகும்போது மார்த்தாள் அவன் செத்து நாலுநாளாகிவிட்டதே நாறுமே என்றாள். இயேசு அவளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார். பிரியமானவர்களே, இன்று தேவனை விசுவாசிப்பீர்கள் என்றால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள்.

இந்த செய்தியின் மூலமாக விசுவாசத்தின் பிள்ளைகளாக மாற்றப்பட்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். உங்களுடைய விசுவாசம் ஆபிரகாமுடைய விசுவாசத்தைப்போல வளர்ந்து பெருகட்டும். "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்று சொன்ன கர்த்தர் உங்களோடு இருப்பாராக!

# நாம் ஏன் மனசாட்சியை ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக ஏற்றுக்கொள்வதில்லை

## Why We do not Accept The Conscience As A Safe Guide

*J.C.Choate*



மனசாட்சி என்ற வார்த்தையானது மனிதனுடைய இருதயத்தோடும், மனதோடு, ஆத்துமாவோடும் கிரியைச் செய்யக்கூடியதாகும். இதன் பொருள், காரியங்கள் சரியானதா அல்லது தவறானதா என்று தீர்மானிக்கும்படிக்கு மற்றவைகளோடு ஒப்பிட்டு பார்க்க உதவுகின்ற தகவல் மற்றும் அறிவு போன்றவற்றின் ஒரு குறிப்பிட்ட முடிவினை ஒருவன் சேகரித்திருக்கின்றதாகும். ஒருவேளை அந்த தகவல், சரியான்வைகளைச் சார்ந்த அல்லது தவறானவற்றைச் சார்ந்த அறிக்கைகளாக இருக்கலாம். இது சரியா அல்லது தவறா என்ற அக்கரையில்லாமல், இது சரியானதாக ஒத்துக்கொள்ளப்பட்டு பிறகு ஒரு வழிகாட்டியாக பயன்படுத்தப்படலாம். மனசாட்சி ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக செயல்படுகிறது என நினைக்கின்றவர்கள் இருக்கின்றனர். மற்றவர்கள் நல்மனசாட்சியை கொண்டிருப்பதைக் குறித்து பேசுகின்றனர், மேலும் அவர்கள் நல்மனசாட்சியுடையவர்களாயிருப்பதினால், இது தன்னில் தானே சரியானவற்றை உருவாக்குகிறது என நினைக்கின்றனர். இருப்பினும், ஆனால் ஒருவன் தான் சத்தியத்தைப் பெற்றுவிட்டதாகவும், நினைத்துக்கொண்டிருக் கிறவனாக வஞ்சிக்கப்பட்டவனாயிருக்கலாம். இவனுடைய நல்மனசாட்சி பிறகு சத்தியத்தின் மீது அடித்தளமிடாமல் தவறானவற்றின் மீது அடித்தளமிட்டதாக இருக்கிறது. ஆகவே தான் ஒன்றினை சரியா அல்லது தவறா என்று தீர்மானிப்பதற்கு தன்னுடைய மனசாட்சியை முடிவான பிரதானமாக செயல்பட அனுமதிக்கக்கூடாது.

மனசாட்சி எவ்வாறு செயல்படுகிறது என மேலும் விளக்கமளிக்க, ஒரு சிறு பிள்ளையைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள் அந்த சிறு பிள்ளையாண்டான் தன்னுடைய பெற்றோர்களால் திருடுவது தவறானது அல்லது தனக்குரியதல்லாத ஒன்றினை எடுத்துக்கொள்வது தவறானது என போதிக்கப்படுகிறது. அவன் தன்னுடைய பெற்றோர்களிடம் இருக்கும் காலமெல்லாம் தொடந்து இவ்வாறு போதிக்கப்படுகிறான். ஏனென்றால் அவன் தன்னுடைய பெற்றோர்களை கனப்படுத்துகிறான். இதனையே மற்ற நேர்மையான பெற்றோர்கள் போதிக்கின்றனர், கட்டளையும் இதனையே கூறுகிறது, உண்மையுள்ளவனா யிருக்கும்படி அவன் இதை ஏற்றுக்கொண்டு வளருகிறான். ஆனால் ஒரு நாள் தான் வைத்துக்கொள்ள விரும்பின ஒன்றை நண்பனுடைய வீட்டில் அவன் காண்கிறான்

என நினைத்துக்கொள்ளுங்கள் அவன் தன்னுடையதல்லாத ஒன்றை எடுத்துக்கொள்வதற்கு சோதிக்கப்பட்டு அதை எடுத்துக்கொள்கிறான். ஏனென்றால் அவன் தான் போதிக்கப்பட்டவற்றிற்கு விரோதமாக செயல்பட்டு கொண்டிருக்கிறான், அவனுடைய மனசாட்சி அவனை கஷ்டப்படுத்துகிறது. இறுதியாக அவன் தான் எடுத்துக்கொண்ட அந்தப்பொருளை திருப்பிக்கொடுத்துவிட கட்டாயப்படுத்தபடுவதாக உணருகிறான். ஆனால் இதே காரியம் தவறாகப் போதிக்கப்பட்டிருக்கிறவனுக்கும் சொல்லப்பட்டிருக்கலாம். இருந்தபோதிலும், இது தவறு, அல்லது ஏதோ பிழை. உண்மையாயிருக்க போதிக்கப்பட்டிருக்குமானால், பிறகு இது உண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது, ஒருவன் சத்தியமுள்ளவனா யிருப்பதற்கு எப்படிப் போதிக்கப்பட்டிருக்கிறானோ அவற்றிற்கு எதிராக அவன் செயல்பட்டால், அவனுடைய மனசாட்சி அவனை கஷ்டப்படுத்துகிறது.

பின்பு, ஒருவனுடைய மனசாட்சி நம்பத்தகுந்ததாயிருக்க வேண்டுமானால் அது சத்தியத்தின் அடிப்படையில் இருக்கவேண்டும். வேறுவிதமாக சொல்வோமானால், சத்தியம் அதாவது, தேவனுடைய வார்த்தை மனசாட்சியை ஆளுகை செய்யவேண்டும். ஒருவனுடைய மனசாட்சி வஞ்சகத்தாலும் அல்லது தவறானவற்றினாலும் அஸ்திபாரம் போடப்பட்டிருக்குமானால், அந்த மனசாட்சி ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக கருதப்படமுடியாது.

நாம் தேவனுடைய வார்த்தைக்குத் திரும்புகையில், நாம் பேசிக்கொண்டிருக்கிறவற்றிற்கு சவுல் ஒரு சிறந்த மாதிரி என்பதைக் காணலாம். முதலாவதாக, சவுல் ஒரு யூதன் என்பதையும், அவன் யூத சமயத்தைப் பின்பற்றினவன் என்பதையும், தன்னுடைய சமயத்திற்காக மிகுந்த வைராக்கியங் கொண்டவன் என்பதையும், மேலும் கிறிஸ்தவம் அவனுடைய சமயத்தின் விரோதியாய் இருந்தது என நினைத்தான் என்பதையும் சிந்தியுங்கள் இதன் விளைவாக, அவன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தும் பொருட்டுச் சென்றான். நாம் அவனைக் குறித்து இவ்விதமாக வாசிக்கிறோம்: "சவுல் வீடுகள் தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான்" (அப்.8:3). தொடர்ந்து நாம், "சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய், இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டு பிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்" (அப்.9:1,2) என வாசிக்கிறோம். இச் சம்பவம் தொடர்கையில், கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகும்போது சவுலும் அவனுடைய கூட்டாளிகளும் தமஸ்குவுக்குப் பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்தனர். பிறகு," அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது; சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக்கேட்டான். அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்; நீ துன்பப்படுத்துகிற இயேசு

நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர். நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்" (அப்.9:4-6) என நாம்வாசிக்கிறோம். அனனியா என்னும் பேருள்ள ஒரு சுவிசேஷப் பிரசங்கி எவ்வாறு அவனிடத்தில் வந்து, எழுந்து அவனுடைய பாவங்கள் கழுவப்படும் பொருட்டு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று அவன் சொல்லுகிறதையும் வேதவாக்கியம் தொடர்ந்து குறிப்பிடுகிறது (அப்.22:16). இப்போது சவுல் என்ன செய்தான்? அவன் கிறிஸ்துவின் விசுவாசியாக மாறினான், தன்னுடைய பாவத்திற்காக மனந்திரும்பினான், கிறிஸ்துவை கர்த்தராக ஏற்றுக்கொண்டான், பிறகு அவன் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான். இதைச் செய்ததும், அவன் தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று பிரசங்கித்தான் (அப்.9:20) என்று வேதம் சொல்கிறது.

இப்போது இந்த மனிதனைப்பற்றி யோசித்துப் பாருங்கள். இவன் யூத சமயத்திற்காக மிகவும் உண்மையுள்ளவனாகவும், வைராக்கியமுள்ளவனாகவும் இருந்தான். இவன் கிறிஸ்தவத்திற்கு விரோதமாக கிறிஸ்தவ புருஷர்களையும், ஸ்திரீகளையும் துன்புறுத்தினான். ஆனால் திடீரென்று கிறிஸ்துவின் விசுவாசியாக மாறி, கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தவனாக, கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று பிரசங்கித்தான். அதுமாத்திரமல்ல, மீதமுள்ள தன்னுடைய வாழ்நாட்களை கர்த்தருக்கு ஊழியஞ்செய்து, அவருடைய சுவிசேஷத்தைப் பரப்புகிறவனாகக் கழித்தான்.

ஆனால் அவன் ஒரு கிறிஸ்தவனாக மாறுவதற்கு முன் அவனுடைய நாட்கள் எப்படியிருந்தது? அவன் தான் செய்தவற்றில் நேர்மையுள்ளவனாகவும் உண்மையுள்ளவனாகவும் இருந்தானா? இவையெல்லாவற்றையும் அவன் ஏன் செய்தான் என்பதை அவனே விளக்குகிறதை கேட்போம். அவன், "முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்கவேண்டுமென்று நினைத்திருந்தேன். அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன். நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரம் பெற்று, பரிசுத்தவான் களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலை செய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன். சகல ஜெபஆலயங் களிலும் நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து, தேவதூஷணஞ் சொல்லக் கட்டாயப் படுத்தினேன்; அவர்கள் பேரில் மூர்க்கவெறிகொண்டவனாய் அந்நிய பட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன்" (அப்.26:9-11) என்றான்.

அந்நாட்களில் சவுல் சபையைத் துன்பப்படுத்தின போது அவன் நல் மனசாட்சியுடையவனாக இருந்திருக்கிறான் என்று இவைகளெல்லாம் கூறுகிறது. அவன் என்ன செய்து கொண்டிருந்தானோ, அவற்றில் அவன் நேர்மையுள்ள வனாகவும் உண்மையுள்ளவனாகவும் இருந்தான். அவன் தான் செய்துகொண்டி ருந்தவற்றைக் குறித்து நல்லதென்று உணர்ந்தவனாக சந்தேகங்கொள்ளா திருந்தான். ஆனால் உண்மையென்னவென்றால், அவனுடைய மனசாட்சி

தேவன் அவன் செய்யும்படி விரும்பியவற்றின் அடிப்படையில் செயல்பட்டுக் கொண்டிருக்கவில்லை, ஆனால் அவன் தான் சரியென்று நினைத்தவற்றின் அடிப்படையிலேயே செயல்பட்டுக் கொண்டிருந்தான். அவன் சத்தியத்தைக் கற்றுக்கொண்ட பிற்பாடே, அவன் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்தவனாக, தேவனுக்கு உகந்தவனாக மாறினான்.

சவுலுடைய மனந்திரும்புதலுக்குப் பிறகு அவனுடைய பெயர் பவுல் என மாற்றப்பட்டது அதற்கு பிறகு அவன், " என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்ததராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன். முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்; அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன். நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடுங்கூட என்னிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகிற்று. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான். அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும் பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம் பெற்றேன். நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்" (1தீமோ.1:12-17) என்றான்.

முன்னதாக உள்ள வேதவாக்கியத்தில் பவுல் தேவனுக்கு முன்னே எல்லா விஷயங்களிலும் நல்மனசாட்சியோடே நடந்துவந்த நாட்கள் வரைக்கும் நினைவுப்படுத்தப்படுகிறான் என நான் நினைக்கிறேன் (அப்.23:1) மேலும் அது வரை அவன் தேவனோடும் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவோடும் போரிட்டும், கர்த்தருடைய ஜனங்களைத் துன்புறுத்திக்கொண்டும் தன்னுடைய முந்தைய நாட்களைக் கழித்திருக்கிறான். சத்தியத்தைக் கற்றுக் கொண்டபோதும் தான் ஒரு கிறிஸ்தவனாக மாறும்படிக்கு தேவனுக்குக் கீழ்ப்படிந்த போதும், அவன் தேவனுடைய இரக்கமும் கிருபையும் உண்மையாகவே மிகப்பெரிது என்றும் தான் இரட்சிக்கப்படுவதற்கு பாவிகளில் பிரதான பாவி தான் என்பதையும் உணர்ந்து கொண்டான். அவன் தன்னுடைய கடந்த காலத்தை ஒருபோதும் மறக்கவில்லை. ஆனால் தன்னுடைய மீதியான நாட்களில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி பந்தையப்பொருளுக்காக முன்னானவைகளை நாடி கடந்த காலத்தை ஈடு செய்யும்படிக்கு அவருடைய பலத்தினாலே எல்லாவற்றையும் செய்யவே இதை அனுமதித்தான்.

என்னுடைய சிநேகிதரே, தேவன் ஒரு மனிதன் நல்மனசாட்சி கொண்டவனாயிருப்பதையே எதிர்பார்த்திருப்பாரானால், எல்லா சமயத்தினரும்

நல்மனசாட்சியினை உடையவராயிருந்து இரட்சிக்கப்படமுடியும் என அர்த்தமாகும். இதைப் போல எல்லா சபையினரும் இரட்சிக்கப்படமுடியும் என அர்த்தமாகும். ஜனங்கள் தேவனிடத்தில் விசுவாசம் கொண்டாலும் விசுவாசம் கொண்டிரா விட்டாலும் அவர்கள் இரட்சிப்பப்படமுடியும் என அர்த்தமாகும். இது ஒரு மனிதன் சன்மார்க்கமான வாழ்வின் அடிப்படையில் இரட்சிக்கப்பட முடியும் என அர்த்தமாகிவிடும் அல்லது வெறுமனே நற்கிரியையின் அடிப்படையில் இரட்சிக்கப்பட்டு விடமுடியும் என அர்த்தமாகிவிடும். இது ஒருவன் கிறிஸ்தவனாகவோ அல்லது கிறிஸ்தவனல்லாதவனாகவோ, ஒருவன் சபை அங்கத்தினனாகவோ அல்லது அங்கத்தினனல்லாதவனாகவோ, அல்லது ஒருவன் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனோ அல்லது விசுவாசமற்றவனோ எப்படியிருந்தாலும் ஒன்றுமில்லை, எல்லா ஜனங்களும் பொதுவாக தங்களுடைய சுய எண்ணத்தை, செயல்களை, சமயத்தை, மற்றும் அநேக காரியங்களை நியாயப் படுத்தும் சுபாவமுடையவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் தங்களுடைய மனசாட்சியை பொசுக்கி அல்லது அது அவர்களை தொடர்ந்து இனி குத்திக்கொண்டிருக்கவில்லை என தேவனுடைய சித்தத்திற்கு எதிராக செயல்படலாம் (1தீமோ.4:1-5). இது கடைசியாக ஒரு நல் மனசாட்சியை உருவாக்கலாம்.

ஒரு நல்மனசாட்சி மட்டுமே இதன் பதிலல்ல. ஒருவனுடைய இரட்சிப்பிற்கு அது உத்தரவாதமல்ல. ஒருவன் தேவசித்தத்தின் ஞானத்தின் மேல் அஸ்திவாரமிட்டு சரியானபடி வாழ்கிறவனாயிருக்கும் போது தன்னுடைய மனசாட்சியின் மேல் நம்பிக்கை வைக்கமுடியும். ஏனென்றால் ஒருவனுடைய நினைவுகள், செயல்கள், நேர்மையான வாழ்வு போன்றவை தேவனுடைய வார்த்தையினால் ஆளப்படுகிறது. மனசாட்சியானது தேவனுடைய வார்த்தையினால் வழிநடத்தப்படுகின்றபோது மட்டுமே ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக இருக்க முடியும். அல்லது இன்னொரு வழியில் இதைக் குறிப்பிட்டால் ஒருவன் தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதை விசுவாசிக்கும் போதும் அதன்பின் அவனுடைய மனசாட்சி அவனை குத்தும் போதும், அவன் தேவனுடைய போதனைக்கு விரோதமாக செயல்படும் போது அல்லது கர்த்தர் எதிர்பார்க்கிறபடி வாழாதிருக்கும்போது அவனுடைய மனசாட்சி உயிரோடும் செம்மையாகவும் இருக்கிறது என இது அர்த்தமாகிறது.

வேதாகமம் தேவனுடைய வார்த்தையை உள்ளடக்கியுள்ளது, இது உண்மை, இது சரியானது. இப்போது நாம் ஆவியானவரால் கொடுக்கப்பபட்டுள்ள அந்த வார்த்தைக்கேற்ப ஜீவிக்கும் போது, அதாவது, நாம் கர்த்தருடைய போதனையோடு ஒத்துப்போகிறவர்களாயிருக்கிறோம் என ஆவியானவரின் வார்த்தை ஏற்றுக்கொள்கிறது அதன்பின் நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக் கிறோம் என அறிந்து கொள்வோம். எனவே பவுல் சொல்கிறான், அவன் சொல்வதை கவனியுங்கள். "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்"

(ரோம.8:16). வேறொருவகையில், ஆவியானவரின் வார்த்தை, தேவனுடைய வார்த்தை, ஒரு காரியத்தை சொல்கிறது அல்லது குறிப்பிட்ட காரியங்களைப் போதிக்கிறது, மேலும் நாம் அதற்குக் கீழ்ப்படியத்தவறும் போது அல்லது கர்த்தர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறபடி ஜீவிக்க முற்படும்போது, இது ஆவியானவர் வார்த்தையின் மூலம் திருவுளம் பற்றுகிறார் எனப் பொருள்படுகிறது, அல்லது இது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கவில்லை அல்லது கர்த்தர் நாம் செய்யும்படி எதிர்பார்த்திருந்தவற்றிற்கு கீழ்ப்படியாதவர்களாயிருக்கின்றோம் என அறிவிக்கின்றது.

அப்படியானால் நல்ல எண்ணங்கள் அல்லது நல்மனசாட்சியை மட்டும் கொண்டிருத்தல் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்றோ அல்லது நாம் தேவனுடைய பிள்ளைகளாகயிருக்கிறோம் என்றோ நிரூபிக்கின்றதில்லை. தயவு செய்து கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உத்தரவிட்டுள்ள வழியைத் தவிர வேறு எந்த வழியிலும் நீங்கள் இரட்சிக்கப்பட முடியுமென நினைத்து வஞ்சிக்கப்பட்டுவிடாதீர்கள். நிச்சயமாக, நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதற்கு நாம் கீழ்ப்படியத்தவறினால், இது நம்முடைய மனசாட்சி உயிர்வாழ்ந்து கொண்டிருக்குமானால், இது தேவன் சொல்லியிருக்கிறகாரியம் நமக்குரியதானால், நம்முடைய மனசாட்சி நம்மை உணர்த்தும் மற்றும் அது அவ்வாறு உணர்த்த வேண்டும் என்று பொருள்படுகிறது. நாம் தேவனோடு காரியங்களை சரியாக உருவாக்க வேண்டுமென்று இது ஒரு சிறந்த நினைப்பூட்டுபவையாக இருக்கிறது. நாம் அதைச் செய்யும் போது, நாம் அவருடைய சித்தத்தோடு ஒரு மித்துதிருக்கிறோம் என அறிகிறோம், இது நல்ல எண்ணங்களை, நல் மனசாட்சியை உருவாக்குகிறது, ஆனால் நாம் தேவனுடைய சித்தத்தை அறிகிறோம் என்ற அடிப்படையிலும் நாம் அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறோம் என்ற அடிப்படையிலும் மட்டுமே இருக்கவேண்டும். இந்த அறிவின் அடிப்படையில் நாம் ஒரு நல்லமனசாட்சியை பெற்றிருக்க வேண்டும், இதன் மூலம் மட்டுமே நாம் சந்தோஷமாக இருக்க முடியும்.

நீங்கள் நல் மனசாட்சியுடையவர்களாயிருக்கிறீர்களா? தேவனுடைய சித்தத்தை அறிவீர்களா? அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து இருக்கிறீர்களா? இல்லையென்றால், உங்களுடைய மனசாட்சி உங்களை குத்திக் கொண்டிருக்கிறதெனவும் மேலும் அது கர்த்தருக்கு நீங்கள் கீழ்ப்படியும் வரையும் தொடர்ந்து குத்திக்கொண்டிருக்குமெனவும் நாம் நம்புகிறேன். கிறிஸ்துவை விசுவாசிப்பீர்களென்றால், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, உங்கள் பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது கர்த்தர் உங்களை இரட்சித்து, உங்களை தம்முடைய பிள்ளையாகவும் தம்முடைய குடும்பமாகிய சபையில் ஒரு அங்கத்தினனாகவும் ஆக்குவார் (மாற்.16:16, அப்.2:38; கலா.3:26,27; அப்.2:47). இதை நீங்கள் செய்வீர்களென்றால் நீங்கள் நல் மனசாட்சியை பெறமுடியும், அதில் உங்களுக்கென்றுள்ள கர்த்தருடைய சித்தத்தை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்

# நித்திய பலியான இயேசு கிறிஸ்து
# Jesus Christ, Eternal Sacrifice

*Bethy Burton Choate*



## நம்முடைய மறுமொழி

தேவவாக்கியங்களில் மிகச்சரியான முழுமையான வாசிப்பில் நாம் தொடர்ச்சியான ஆயத்தத்தையும், ஒன்றின்மேல் ஒன்றாக கட்டப்பட்டுள்ளதையும் இறுதியாக மனிதன் தேவனோடு ஒப்புரவாகும்படிக்கு திறந்த வழி கொடுக்கப்பட்டிருக்கிறதையும் காணலாம். பாவத்திற்கான சீரப்பிரகாரமான தண்டனைக் குரியவை இயேசுவின் மரணத்தில் கிரயமாக்கப்பட்டது. மனிதவர்க்கத்தோடு அவர் கட்டப்பட்டு, தேவனுடைய புத்திர உறவினால் தேவனோடு நம்முடைய புத்திர உறவிற்கு வாய்ப்பு உருவாக்கப்பட்டதின் மூலம் ஆவிக்குரிய ஒப்புக்கொடுத்தல் உருவாக்கப்பட்டது.

இவையெல்லாம் நமக்கு முன் திட்டமிடப்பட்டு, நம்முடைய ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்ய போதுமானதாயிருக்கிறது. ஆனால் மற்றபடி மன்னிப்பின் போர்வை ஒவ்வொரு மனிதனையும் மூடிக்கொள்கிறதில்லை. நாம் எவ்வாறு இதை நமக்கென்று சொந்தமாக்கிக் கொள்கிறோம்? **நாம் எவ்வாறு தனிப்பட்ட முறையில் தேவனுக்கு மறுமொழி கொடுக்கிறோம்?** (யோவா 6:45).

"பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்" என்கிறது. உலக ஜனத்தொகையின் மத்தியில் எல்லாரும் பிதாவின் செய்தியிலிருந்து உண்மையாக கற்றுக்கொள்கிறதில்லை. 2 தெசலோனிக்கேயர் 2:14. " எங்கள் சுவிசேஷத்தினாலே அவர் உங்களை அழைத்தார்" என போதிக்கிறது.

எனவே பிதாவின் செய்திச் சுவிசேஷம் நம்முடைய இருதயங்களுக்கு அழைப்புவிடுகிறது. சுவிசேஷம் என்றால் என்ன? இது கொரிந்தியர் 15:3,4ல் இவ்வாறாக விளக்கப்பட்டுள்ளது.

"கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து"

## ஒப்புக்கொடுத்தல் - The Commitment

சில ஜனங்கள் செய்தியைக் கேட்டு அதை மறுதலிக்கின்றனர். மற்றவர்கள் கேட்டு இதன் அழைப்பு தங்களுடைய இருதயங்களை உடைக்கிறது

என அவர்களுடைய மறுமொழி பிதாவினிடத்தில் ஒரு உணர்ச்சியுள்ள அன்பு மழையாக தங்களுடைய சித்தத்தை அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும் விருப்பத்தில் உடன்பட்டுள்ளது. அவர்கள் தங்களுடைய ஜீவியங்களில் ஒரு திருப்புமுனை வந்தடைந்து என்பதை அறிந்து கொள்கின்றனர்.

பரிதாபப்படத்தக்க வகையில் பலர் தங்களுடைய பாவங்களுக்கான மன்னிப்பை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்கள் தேவனுடைய குடும்பத்தில் ஆவிக்கேற்றபடி பிறந்திருக்கிறார்கள் என்றும் தேவன் மேலுள்ள தங்களுடைய புதிய அன்பு சாட்சிபகருகிறபடியினால் அவர்களுடைய இருதயம் மாற்றப்பட்டு அவர்கள் சந்தோஷமும் அடைகின்றனர் என்று தவறாக நம்புகின்றனர்.

சந்தேகமே இல்லை, திருப்புமுனை, ஒப்புக்கொடுத்தலின் நொடிப்பொழுது போன்றவை இரட்சிப்பினுடைய ஒழுங்குமுறையின் ஒரு கடினமான பகுதியாயிருக்கிறது. நம்முடைய வேதவாக்கிய ஆராய்ச்சியில் எப்போது இதற்கு இணையான ஒரு சம்பவத்தை நாம் காண்கிறோம்? இயேசு மனிதனுக்காக முழுமையான ஒப்புக்கொடுத்தலின் விளிம்பை அடையும்போது கெதச்மனே தோட்டத்தில் இது காணப்படவில்லை அவர் தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்க போராடினபோதும் கூட செய்யப்பட்டுள்ள பாவத்திற்காக திகில் அடைந்ததாக பொருள்பட்டது.

உண்மையாக அவர் அந்த திட்டத்தினை சந்திக்க வேண்டியவராயிருந்தார் மேலும் நம்மைத் தெரிந்துகொண்டாலும் நிராகரித்தாலும் உண்மையாகவே அவர் தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டியவராயிருந்தார் நாம் ஒவ்வொருவரும் அந்தத் திட்டத்தினை சந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் கண்டிப்பாக தேவனை நம்முடைய பிதாவாக் தெரிந்துகொள்ள வேண்டும். அல்லது அவரை புறக்கணிக்க வேண்டும். நாம் கண்டிப்பாக நம்முடைய மாம்ச சித்தங்களை அவருக்குக் கீழாகக் கொண்டு வரவேண்டும், கிறிஸ்து நம்முடைய பாவங்களை சுமந்து கொள்வதைத் தெரிந்துகொண்டது போல, நாம் அந்தப் பாவத்திற்கு இனி ஒருபோதும் ஊழியஞ்செய்யக்கூடாது என்ற விருப்பத்தோடு அவைகளை நம்மிடமிருந்து எடுத்துப்போடும்படி அவருக்கு அனுமதி அளிப்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால், கிறிஸ்து தோட்டத்தில் மனப்பூர்வமான ஒப்புக்கொடுத்தலோடு முடித்திருந்தார் என நினைக்கலாம். அந்த நேரத்திற்குத் திரும்புகையில்: அவருடைய போராட்டம் நிறைவடைந்தது; அவர் தமக்குள்ளாக சமாதானத்தோடிருந்தார். இன்று தேவனுடைய மன்னிக்கப்பட்ட குழந்தையாக இருக்கும் விருப்பத்தோடு, அன்பினால் அவைகள் அவரிடமாகத் திரும்பும்போது இது பல இருதயங்களை விவரிக்கின்றதில்லையா? அவர் அதை நிறுத்தியிருப்பாரால், அங்கே சிலுவை இருந்திருக்காது, இரத்தஞ்சிந்துதல் இருந்திருக்காது, பாவத்திற்கான கிரயம் செலுத்தப்பட்டிருக்காது, தேவனுடைய பிள்ளைகளாக மாறும்படிக்கு நமக்காக ஒரு வழி உருவாக்கப்பட்டிருக்காது.

இதே முறையில், தங்களுடைய தனிப்பட்ட சுய ஒப்புக்கொடுத்தல் நிலையில் தடைசெய்கிறவர்கள் பாவத்திற்கு மரிக்கின்ற ஒழுங்கு முறையிலும் கிறிஸ்துவோடு மரிப்பதிலும் அவரோடுகூட உயிர்த்தெழுதலிலும் பங்கடையவே முடியாது.

| |
|---|
| தேவனால் மன்னிக்கப்பட்ட ஒருவன் என்பதன் அர்த்தம் பாவிக்குள் மனம் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? அவன் அதிகம் கிரியை செய்யவேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறாரா? |

## கிறிஸ்துவோடு மரித்தல் - Dying with Christ

நமக்காக மரித்த அவருடைய மரணத்தில் நாம் எவ்வாறு கிறிஸ்துவை மிக ஆர்வத்துடன் பின்பற்றுகிறோம்? ரோமர்6:17,18 இவ்வினாவிற்கு

"முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்" என்று நமக்குச் சொல்லுகிறது.

**இவ்வாறாக, மரணம், அடக்கம் மற்றும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலாகிய தேவனுடைய செய்தியை நாம் கேள்விப்படுகிறோம்.**

நாம் இதன் அர்த்தத்தைக் கற்று அறிந்திருக்கிற வண்ணமாக அவருடைய அன்பின் வல்லமையானது பாவத்தை விட்டு திரும்புபடிக்கு நம்மை அழைத்துக் கொண்டு வருகிறதாகவும் அவருக்கு நம்முடைய ஆத்துமாக்களை ஒப்புக்கொடுக்கும்படிக்கு நம்முடைய இருதயங்களை அழைக்கிறது. **பிறகு அந்த கோட்பாட்டின் அமைப்பிற்கு இருதயத்திலிருந்து கீழ்ப்படிகிறோம்.** சுவிசேஷம் - மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதல் - என்பவை எந்த அமைப்பை நம்முடைய சொந்த வாழ்வில் ஏற்படுத்துகிறது? ரோமர்6:3-11.

"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்.

ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால் அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே.

ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனே

கூடப்பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம். மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டு கொள்வதில்லை. அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்.

அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்" என்று விடையளிக்கிறது.

எனவே, கிறிஸ்துவின் மரணத்தின்மூலம் நம்முடைய தனிப்பட்ட சொந்த ஆத்மாக்களுக்கு புத்திர உறவை ஏற்படுத்தி உரிமைபாராட்ட விரும்புவோமானால், நாம் கண்டிப்பாக அவருடைய மரணத்தின் மாதிரியின்படி பாவத்திற்கு **செத்து**, ஞானஸ்நானத்தில் அவரோடுகூட அடக்கம்பண்ணப்பட்டு அதன்பின் **உயிர்த்தெழுந்து** அல்லது தேவனுடைய குடும்பத்தில் ஒரு புதிய மனுஷனாக ஒரு புதிய ஜீவியத்தை நடத்தும்படிக்கு ஞானஸ்நானத்திலிருந்து எழுப்பப்பட வேண்டும். **இந்த மரணம் மற்றும் புதிய பிறப்பு இல்லாமல் புதிய வாழ்வு இருக்க முடியாதென** நாம், தனிப்பட்டவிதத்தில் தேவனுக்கு முன்பாக அறிந்து கொள்வது இவற்றின் அதிமுக்கியமானதாகும்.

## "புதிய மனிதனின்" பிறப்பு - The Birth Of the "New Man"

இந்த ஒழுங்கு முறையில் என்ன நடைபெற்றுள்ளது? பழைய மனிதனின் மரணத்தில், ஒரு புதிய பிறப்பு உண்டாக்கப்பட்டுள்ளது. இயேசு போதித்தபடி "..... ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் (மறுபடியும்) பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்...." (யோவான்3:3-5).

"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2கொரி.5:17).

ஒரே வழி

'ஒருவழி' வேதபாடம்
The Master Course படிக்க விரும்புகிறவர்கள் இன்றே
தபால் செலவுக்காக ரூபாய்15-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று Certificate பெற்றுக்கொள்ளுங்கள்
வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College**
**Post Box 5, Batlagundu-624 202**
**S.INDIA**

# வேதாகம ஆலோசனை

**"இவைகள் பேதைகளுக்கு வினாவையும், வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும். புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான்; விவேகி நல்லாலோசனைகளை அடைந்து; நீதிமொழியையும், அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும், அவர்கள் உரைத்த புதை பொருள்களையும் அறிந்துகொள்வான்"(நீதி.1:4-6)**

**வேதாகம ஆராய்ச்சி பாடம்-3**

**1. மறுபிறப்பைக்குறித்து வேதாகமம் என்ன போதிக்கிறது?**

"ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்று நிக்கொதேமுவிடம் இயேசு சொன்னார் (யோவா.3:3). அதற்கு அவன் "ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான்" (யோவா.3:4). இயேசு அதற்கு "ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும் ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்" என்றார் (யோவா.3:5,6).

இந்த வசனத்தில் இயேசு மறுஜென்ம பிறப்பை குறித்து சொல்லவில்லை. மறுபிறப்பைக்குறித்து சொல்லுகிறார் மறுபிறப்பு என்றால் மறுபடியும் பிறப்பது. ஏன் நாம், நன்றாகத்தானே பிறந்திருக்கிறோம் என்று நினைக்கத்தோன்றும். ஆதாமுடைய மீறுதலினாலே நாம் எல்லோரும் பாவத்தின் கீழ் அடைக்கப்பட்டோம். எல்லோரும் பாவிகளானோம். நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. ஆனபடியினாலே இந்த பாவசரீரம் ஒழிந்துபோகும்படியாக நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானத்தினாலே அதாவது ஜலத்தினாலும் ஆவியினாலும் என்று சொல்லப்பட்டபடி கழுவப்பட்டு புதிதான ஆவியுள்ளவர்களாகி மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் நடந்து கொள்ளும்படியாக புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ள வேண்டும். இப்படி ஆவியினால் பிறக்கிற மனுஷன் ஆவிக்குரியவனாயிருப்பான்.

"காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது. அதன் சத்தத்தைக் கேட்கிறாய் ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்கும் போகிறதென்றும் உனக்குத்தெரியாது ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்" (யோவா.3:8). நீங்கள் இப்படிப் பிறந்து இருக்கிறீர்களா? அப்படி இல்லை என்றால் இன்றே கிறிஸ்து இயேசுவுக்குள் ஆவிக்குரிய மனிதனாக பிறக்க முயற்சி எடுங்கள்.

## பேசும் வேதாகமம் : 16

1. சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து எதைப்பிரசங்கித்தார்கள்?–சுவிசேஷவசனத்தை – அப்.8:4
2. எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுது கொள்ளுகிற யாவருக்கும் எப்படிப்பட்டவராயிருக்கிறார்? – ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார் – ரோம.10:12.
3. தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல் எதற்குத் தேவனாயிருக்கிறார்? – சமாதானத்திற்கு – 1 கொரி.14:33
4. ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல் மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் எப்படிப்பட்டவர்களாக எண்ணவேண்டும்? மேன்மையானவர்களாக – பிலி.2:3.
5. உங்கள் ஆவி, ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது எப்படிப்பட்டதாயிருக்கும்படி காக்கப்படவேண்டும்? – குற்றமற்றதாயிருக்கும்படி – 1தெச.5:23
6. போதுமென்கிற மனதுடனே கூடியதேவபக்தியே எப்படிப்பட்ட ஆதாயம்? – மிகுந்த – 1தீமோ 6:6
7. ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால், எதுவும் மாற்றபட வேண்டியதாகும்? நியாயப்பிரமாணமும் – எபி.7:12
8. அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற் பலன்களாவதற்கு நம்மை எதினாலே ஜநிப்பித்தார்? சத்திய வசனத்தினாலே – யாக்.1:18.
9. பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது எப்படிப்பட்ட கிரீடத்தைப் பெறுவீர்கள்? – மகிமையுள்ள வாடாத – 1பேது. 5:4
10. உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள் ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் யாருடைய அன்பில்லை? – பிதாவின் –1யோவா 2:15.

## பொது அறிவுச் சோதனை

1. இந்தியாவில் பாபா அணு ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?
   அ) கொல்கத்தா ஆ) டெல்லி இ) மும்பை
2. ரிக்டர் அளவுகோல் எதை கணக்கிட பயன்படுகிறது?
   அ) காற்றின் அழுத்தம் ஆ) நிலநடுக்கத்தின் அதிர்வுஅளவு இ) காற்றின் அழுத்தம்
3. எந்த பருவத்தில் வாயு மண்டலத்தில் ஈரப்பதம் அதிகமாக இருக்கும்?
   அ) பருவக்காற்றுக்காலம் ஆ) இலையுதிர்காலம் இ) மழைக்காலம்
4. இந்தியாவில் உடன் கட்டை ஏறும் பழக்கத்தை தடுக்க சட்டம்கொண்டு வந்தவர் யார்?
   அ) வில்லியம்பென்டிங்பிரபு ஆ) சர்சன்பிரபு இ) இர்வின்பிரபு
5. ஆகாயவிமானம் எந்திரப்படகுகளின் வேகத்தை கண்டுபிடிக்க உபயோகிக்கப்படும் கருவிஎது?
   அ) ஸ்பீடோமீட்டர் ஆ) ஒடோ மீட்டர் இ) டாக்கோமீட்டர்

விடைகள்:
1. மும்பை
2. நிலநடுக்கத்தின் அதிர்வு அளவு
3. மழைக்காலம்
4. வில்லியம்பென்டிங்பிரபு
5. டாக்கோமீட்டர்

## வேதஅறிவுப்போட்டி எண் 66-ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. தன் ஊரிலே | -லூக்.4:24 | 6. தெற்குவாசல் | -எசே. 46:9 |
| 2. என்னுடைய ஆவியினாலேயே ஆகும் | -சகரி.4:6 | 7. சமாதானத்திற்கு | -1கொரி.14:33 |
| 3. அப்போஸ்தலர்களால் | -அப்.14:3 | 8. நம்பிக்கையோடு | -புல.3:26 |
| 4. யோனா | - யோனா 1:2 | 9. தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாவான் | -கலா.6:3 |
| 5. இயேசு கிறிஸ்து | - ரோம.8:34 | 10. தாழ்த்தும் | -நீதி. 29:23 |

## வேதஅறிவுப்போட்டி எண் 66-ல் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| P.அலிஸ்மேரியம்மாள் | -வத்தலக்குண்டு | S.பிரதீபா | -வேலூர் |
| S.வனிதா | -மதுரை | G.P.ஏசையன்ராஜ் | -கோபி |
| N.ஜான் | -மதுரை | J.S.நிர்மலாஜான் | -மதுரை |
| கிரேஸ்ஜெயா | -வெள்ளகுளம் | S.ஆனந்த் | -நாகமலைபுதுக்கோட்டை |
| P.S.லலிதாபிரேமகுமாரி | -மதுரை | K.மோகன் | -B.குமாரப்பாளையம் |
| Mrs.ஜாஸ்மின்வின்சென்ட்ராஜ் | -மதுரை | S.ஆனந்தராஜ் | -ஈரோடு |
| S.ஸ்டீபன் | -காங்கேயம் | J.சுந்தரி | -சென்னை |
| G.வசந்தநிலா | -மலுமாச்சம்பட்டி | K.விமலா | -க.பாளையம் |
| N.பிரபாசன் | -க.பாளையம் | J.ஜேக்கப்சகாயமேரி | -புதுக்கோட்டை |
| P.முத்துச்சாமி | -பொன்னாபுரம் | A.சேவியர்மேரி | -மதுரை |
| A.ராபர்ட்கிளைவ் | -சிலுவத்தூர் | N.கமலவேணி | -சென்னை |
| E.கார்த்திக்ராஜா | -செட்டிபாளையம் | | |

## சபையின் அவரசத் தேவைகள்

## URGENT NEEDS IN THE CHURCH



* மிகுதியான திறந்த மனங்கள்; குறைவான திறந்த வாய்கள்
* மிகுதியான அடிகள் கதவுகள் மேல்; குறைவான அடிகள் ஒருவர்மேல் ஒருவர்
* மிகுதியான ஆரோக்கிய இதயங்கள்; குறைவான தலைவலிகள்
* மிகுதியான விதை தூவல்; குறைவான மண் தூவல்
* மிகுதியான தன்னல தியாகம்; குறைவான பிறர்நல தியாகம்
* மிகுதியான கவலை போதனை 'என்ன' என; குறைவான கவலை 'யார்' போதித்தார் என
* மிகுதியான லாபம் நேற்றைய கணக்குகளிலிருந்து; குறைவான குருட்டுத்தனம் நாளைய ஆபத்திற்கு.
* மிகுதியான ஆசை புதுப்பித்தலை ஸ்தாபிக்க; குறைவான ஆசை சொந்த அங்கிகாரத்துக்கு.

**-Selected**
**The Voice of Truth International**

கிறிஸ்துவ தலைமைத்துவ
பயிற்சி பாடங்கள்
Christian Leadership Training Course

பாடம் - 2

# சபையின் மூப்பர்கள்
# Elders in the Church
**J.C.Choate**

கடந்த பாடத்தில் எப்படி தேவன் தம்முடைய ஜனங்களுக்கு எப்பொழுதுமே நல்ல வழிநடத்துனர்களை கொடுத்தார் என்பதை பார்த்தோம். அவர் தம்முடைய சொந்த குமாரனையே இந்த உலகிற்கு அனுப்பினார் பின்பு அவர் அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்பட்ட ஒரு கூட்டத்தை தெரிந்து கொண்டு சபையை அதன் துவக்க காலங்களில் நடத்தினார். அவர்கள் சென்ற பின்பு இன்றளவும் தொடர்கின்ற தலைமைத்துவத்தின் இயற்கையான முறையிலான செயல்பாடுகளை தேவன் ஏற்படுத்தியிருக்கிறார். சபையில் மூப்பர்களோடு செய்யவேண்டியவற்றை இப்போது இப்பாடம் நமக்கு கொண்டு வருகிறது.

ஒரே ஒரு சபைதான் உண்டு. அது உலகம் எங்கிலும் காணப்படவேண்டும். இது கர்த்தருடைய சபை, கிறிஸ்துவினுடைய சபை அல்லது கிறிஸ்துவின் சபை (மத் 16:18-19) எபேசியர் 4:1-6, 5:23-27) இந்த ஒரே சபையைப்பற்றி தான் வேதத்திலே நாம் படிக்க முடியும் இது தேவனால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட ஒரே ஒரு சபை. மக்கள் தாங்கள் வசிக்கின்ற பகுதியிலே தேவனை தொழுது கொள்ளவும், அவரை சேவிக்கவும் ஏதுவாக சபையானது அநேக பிராந்தியங்களால் ஆனது. இந்த விதமான பிராந்திய சபைகளை குறித்து புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறோம். (உ-ம்) கொரிந்து பட்டணத்தில் உள்ள சபை (1கொரிந் 1:2 தெசலோனிக்கேயாவில் உள்ள சபை 1தெச 1:1). மேலும் மற்றவைகளும் ஆகும். ஒவ்வொரு பிராந்திய சபைகளும் கிறிஸ்துவை தாங்கள் தலைவராக ஏற்றுக் கொண்ட அநேக அங்கத்தினர்களால் ஆனது (கொலே 1:18, எபே 1:22-23) அவர்கள் ஒருவரோடு ஒருவர் ஐக்கியப்பட்டு ஒரே சரீரத்தில் அங்கமாகயிருக்கிறபடியால் இசைந்து வேலை செய்து. ஒரே நாமத்தைத் தரித்தவர்களாக ஒரே விதமாக தொழுது கொண்டு ஒரே சுவிஷேத்தை போதித்தாலும் ஒவ்வொன்றும் தன்னாட்சியுள்ளது அல்லது சுதந்திரமானது. அவர்கள் சுதந்திரமானவர்கள் என்பதன் பொருள் என்னவென்றால் ஒவ்வொரு பிராந்திய சபையும் தனக்கென்று தலைமைத்துவம் உடையதாக இருக்க வேண்டும். அதாவது 1தீமோ 3 தீத்து 1-ல் சொல்லப்பட்ட தகுதிகள் இருக்கும் பட்சத்தில் அங்கத்தினர்கள் தங்கள் மூப்பர்கள் உதவிக்காரர்களையும் உடையவர்களாக இருக்கலாம்.

வேத வாக்கியங்களிலே பிலிப்பு பட்டணத்திலிருந்த சபை மூப்பர்களையும் மற்றும் உதவிக்காரர்களையும் கொண்டிருக்கிறதைப்பற்றி வாசிக்கிறோம். (பிலி 1:1) தீத்துவை கீரேத்தாதீவில் உள்ள ஒவ்வொரு சபைகளிலும் மூப்பர்களை ஏற்படுத்தும்படி பவுல் புத்திச்சொல்லுகிறார் (தீத்து 1:5) பேதுருவும் கூட தன்னை ஒரு மூப்பராக அங்கிகரிக்கிறார். "உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும் இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்தி சொல்லுகிறதென்ன வென்றால் உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து கட்டாயமாய் அல்ல

மனப்பூர்வமாயும் அவலட்சணமான ஆதாயத்திற்காக அலல, உற்சாக மனதோடும், சுதந்திரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச்செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள் என்றான். (1பேதுரு 5:1-4) மந்தை என்று அவன் இங்கே குறிப்பிடுவது பிராந்திய சபையின் அங்கத்தினர்களே. பிராதன மேய்ப்பர் இயேசுவே.

ஒரு பிராந்திய சபை மூப்பர்கள் உதவிக்கார்கள் இல்லாமல் இருக்க முடியுமா? ஆம் ஏனென்றால் அதன் அங்கத்தினர்கள் அந்த விதமான தலைமைத்துவ பொறுப்பிற்கு தகுதி பெறாமல் இருக்கலாம். ஒரு வேளை அவர்கள் சரீர பிரகாரமாக மிகவும் இளையவராகவும், திருமணம் ஆகாதவர்களாகவும் அல்லது திருமணம் ஆயிருந்தாலும் தேவனுக்கு கீழ்ப்படியும் அளவிற்கு பிள்ளைகள் இல்லாமல் இருக்கலாம் அல்லது ஆவிக்குரிய பிரகாரம் குழந்தைகளாக இருக்கலாம். அந்தவிதமான பொறுப்பை ஏற்பதற்கு மிகவும் இளையவராகயிருக்கலாம். இந்த சூழ்நிலையில் அந்த சபைக்கு யார் வழிநடத்தக்கூடிய பொறுப்பை அளிக்க முடியும்? மெய்யாகவே ஆண் அங்கத்தினர்கள் (சகோதரர்) இதில் என்ன வித்தியாசம்? வித்தியாசம் என்னவென்றால் ஒரு பதவிக்கு நியமிக்கப்பட்ட ஒருவன் அதற்குரிய தகுதியில்லாமல் போனால் பெருமையினால் நிரப்பப்பட்டு எந்தவிதமாக அந்த பதவியில் பணியாற்ற வேண்டுமோ அப்படி செய்யாமல் போகலாம் சில புருஷர்கள் தாங்கள் தகுதி பெறாத நிலை அறிந்தும் தாழ்மையோடு சிறப்பாக தங்களால் இயன்றவரை இந்த பொறுப்புகளை நிறைவேற்ற விரும்பினால் செய்யலாம், அவர்கள் தகுதி பெற்ற பின்பு அதன் அடிப்படையில் நியமிக்கப்பட்டால் பிராந்திய சபையில் தேவன் விரும்பிய வண்ணம் மூப்பர்களாக அவர்கள் இருப்பார்கள்.

வேத வாக்கியங்களில் ஒருவன் மூப்பர் ஆவதற்கு இருக்க வேண்டிய தகுதிகள் அனைத்தும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பவுல் பின் வருமாறு எழுதுகின்றார். "கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான்". இது உண்மையான வார்த்தை ஆகையால் கண்காணியானவன் குற்றச்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும் ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும் போதகசமர்த்தனுமாய் இருக்க வேண்டும். அவன் மதுபானப்பிரியனும் அடிக்கிறவனும் இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல் பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பணஆசையில்லாதவனுமாயிருந்து, தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியபண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்த குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு நூதன சீஷனாயிருக்கக்கூடாது. அவன் நிந்தனையிலும் பிசாசின் கண்ணிலும் விழாதபடிக்கு புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயிருக்கவேண்டும். (1தீமோ 3:1-7). பவுல் பின்னும் தீத்துக்கு சொன்னதாவது " நீ குறைவாயிருக்கிறவைகளை

ஒழுங்கு படுத்தும்படிக்கும் நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும் உன்னைக் கிரேத்தா தீவிலே விட்டு வந்தேன். குற்றஞ்சாட்டபடாதவனும் ஒரே மனைவியையுடைய புருஷனும், துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவனிருந்தால் அவனையே ஏற்படுத்தலாம். ஏனெனில் கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்ற விதமாய் குற்றஞ்சாட்டப்படாதவனும் தன் இஷ்டப்படி செய்யாதவனும் முற்கோபமில்லாதவனும், மதுபானப் பிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், நல்லோர்மேல் பிரியமுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், நீதிமானும் பரிசுத்தவானும், இச்சையடக்கமுள்ளவனும், ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும் எதிர் பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையுள்ள வசனத்தை நன்றாய்ப் பற்றிக் கொள்ளுகிறவனுமாயிருக்கவேண்டும். (தீத்து 1:5-9).

முதலாவது எந்தெந்த பிராந்திய சபையில் மூப்பர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் இரண்டு அதற்கு மேற்பட்டவர்கள் இருக்க வேண்டும். ஒரே ஒரு மூப்பர்மட்டும் இருந்த சபையை பற்றி நீங்கள் ஒருபோதும் வாசிக்க முடியாது அதன் பொருள் என்னவென்றால் கர்த்தர் ஒருபோதும் ஒரு தனி மனிதர் ஆட்சி அல்லது சர்வாதிகார ஆட்சிக்கு எதிரானவர் என்பதே. இரண்டாவதாக மூப்பர்கள் ஞானமுள்ள வழிநடத்துதலை கொடுக்கும்படி சரீர பிரகாரமாகவும் ஆவிக்குரிய பிரகாரமாகவும் முதிர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும். இந்த அடிப்படையில் மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மூன்றாவதாக அவர்கள் மந்தையை மேய்ப்பர் அல்லது மந்தையை நடத்துபவர் என்று அழைக்கப்படுகிறார்கள். (அப் 20:28) அவர்கள் கண்காணிகள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். நான்காவதாக மூப்பர்களுக்குரிய தகுதியிலே ஒரே மனைவியும் நன்னடைத்தையுள்ள பிள்ளைகளை உடையவராகவும் இருக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. இவை காண்பிப்பது என்னவென்றால் அவர்கள் தங்கள் சொந்த குடும்பத்தையும், பிள்ளைகளையும், கர்த்தருடைய சித்தத்தின்படி நடத்தக்கூடிய தகுதி உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதே அவர்கள் மேலும் கனத்தையோ, மகிமையோ, அல்லது உகைத்திற்குரிய ஆதாயத்தையோ வலியுறுத்தாமல் கர்த்தருக்கும் சகோதரருக்கும் ஊழியம் செய்யக் கூடிய திறமையுள்ளவர்களாக இருக்க வேண்டியது அவசியம்.

ஆகவே மூப்பர்கள் தங்கள் பகுதியிலுள்ள பிராந்திய சபைக்கு வழிநடத்துனர்களை அளிக்க வேண்டியவர்களாக யிருக்கிறார்கள். அவர்கள் மேலும் தேவ வசனமானது போதிக்கப்படவும் சபையானது தூய்மையாக காக்கப்படவும் கள்ளப்போதனைகள் நிராகரிக்கப்படவும் சபையானது தேவனை உண்மையாய் தொழுது கொண்டு சேவிக்கவும் கவனமாய் பார்க்க வேண்டும். சபை அங்கத்தினர்கள் அவர்கள் கிறிஸ்துவை பின்பற்றுவதைப் பார்த்து பின்பற்ற வேண்டும்.

## ஜெபியுங்கள்

- TV மற்றும் Radio மூலம் கிடைக்கப்பெற்ற நேயர்களுக்காக...
- அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் 22-வது மாவட்ட வாசகர் கருத்தரங்கிற்காக...
- ஊழியத்திலே நம்மோடு இணைந்து செயல்படுகிற சகோதர சகோதரிகளுக்காக...
- தேனி மாவட்ட ஊழியர் சகோ. கிறிஸ்டிகுமாருடைய திருமண காரியங்களுக்காக...



## தேவ சமாதானம் நிறையட்டும்

1. நீர் அவரோடு பழகி சமாதானமாயிரும். அதினால் உமக்கு நன்மைவரும் -யோபு22:21.
2. கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார் - சங்.29:11.
3. சமாதானத்தைத் தேடி, அதை தொடர்ந்துகொள் - சங்.34:14.
4. நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும் - சங்.85:10.
5. உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதாமுண்டு - சங்.119:165.
6. நீதியின் கிரியை சமாதானம் - ஏசா.32:179.
7. சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் - மத்.5:9.
8. உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும் - லூக்கா24:36.
9. இயேசு தாமே அவர்கள் நடுவில் நின்று உங்களுக்கு சமாதானம் என்றார் - லூக்கா24:36.
10. என்னுடைய சமாதானத்தை உங்களுக்குக் கொடுக்கிறேன் - யோவான்14:27.
11. சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசக்கிப்போடுவார் - ரோமர்16:20.
12. சமாதானமாயிருக்கும் படிக்கே தேவன் நம்மை அழைக்கிறார் - 1கொரி.7:15.
13 அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கினார் - கொலோ.1:20.
14. தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது - கொலோ.3:15.
15. யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள் - எபி.12:14.

*M. இராஜாமணி*

# வெளிச்சத்தின் பிள்ளைகள்

S. ராஜேந்திரன்



வெளிச்சம், இது வாழ்வு பற்றிய மிகச்சரியான ஒரு கண்ணோட்டத்தை கொடுக்கிறது. வாழ்வு என்பது இருளுக்கும் ஒளிக்கும் இடையில் நடக்கின்ற ஒழுக்கரீதியான ஒரு போராட்டமாக உள்ளது. கிறிஸ்தவர்களாகிய நாம் இதன் மத்தியில் இருக்கின்றோம். நாம் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும் இருளான உலகில் ஒளியாய் இருக்கவேண்டுமென்றும் தேவனுடைய வசனம் நம்மை அழைக்கிறது.

எபேசியர்5:-13 வசனமானது முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள். இப்பொழுது கர்த்தருக்குள் வெளிச்சமாயிருங்கள். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் இருங்கள் என்று கூறுகிறது. “அந்தகாரம்” என்ற ஒரே வார்த்தையில் நம்முடைய முன் வாழ்வு தொகுத்து கூறப்படுகிறது. நாம் அந்தகாரத்தில் ஜீவித்திருந்ததுமாத்திரமல்ல நாம் அந்தகாரமாயிருந்தோம்.

அந்தகாரமானது தவறு செய்கிறதில் மகிழ்வுற்று துன்மார்க்கத்தினால் உண்டாக்கப்படும். தீமையான செய்கையில் அகம் மகிழ்ந்து (நீதி 2:13-14) களிகூரும். காரிருள் என்பது பொல்லாதவர்களின் வழியாக உள்ளது. (நீதி 4:19) இது தேவனுடைய அன்பைத்திருப்பிப் போடுகின்றது. தீமையை நன்மை என்றும், நன்மையை தீமை என்றும் அழைக்கின்றது (ஏசயா 5:20) (ஏசயா 42:6) மக்களை சிறைப்படுத்துகிறது இருள்.

மேலும் இருளுக்கும் முழு சரீரத்தை கெடுத்துப்போட வல்லமை உண்டு (மத் 6:23) நியாயத்தீர்ப்பில் பாவிகள் இருளில் தள்ளப்படுவார்கள் (மத் 8:12) வெளிசத்தைப் பார்கிலும் மக்கள் இருளை நேசிக்கின்றனர் (யோ 3:19) இருளில் உள்ள மக்கள் ஒளியினிடத்திற்கு வரவேண்டும் (அப் 26:18). இருளானது நாம் தப்பிக்க இயலாத ஒரு வல்லமையாக உள்ளது. (கொலே 1:12-13). இருளானது மக்களை பார்வையற்றுப்போகச் செய்கிறது (1 யோவா 2:11). (எபேசியர் 6:12)ல் இன்னும் அநேக போராட்டங்கள் உண்டு என்கிறார் பவுல் மேலும் நாம் அந்த காரத்தில் இருக்கிறோம் என்பதை (ரோமர் 1:21, 28-31) வசனங்கள் விளக்குகிறது.

**வெளிச்சத்தில் நடந்து கொள்ளுதல்:**

ஒரு காலத்தில் நாம் அந்தகாரத்தில் இருந்தோம் இப்பொழுது நாம் கர்த்தருக்குள் வெளிச்சமாய் இருக்கின்றோம். (எபேசி 5:8)

வெளிச்சத்தைப் பற்றி தேவனுடைய வசனம் கூறுவதை கவனியுங்கள். வெளிச்சம் நற்கனியை உற்பத்தி செய்கிறது. (ஆவியின்கனி சகல நற்குணத்தில் விளங்கும் (எபேசி 5:9)

நற்குணம் ஒழுக்க மேன்மையை வலியுறுத்துகிறது அது பிறரின் பயனுக்காக மனப்பூர்வமாய் மற்றும் தியாக உணர்வுடன் ஊழியம் செய்வதில்

தனது முழுமையான வழிகாட்டைக் காண்கிறது. ( ரோம. 15:14) படி

நீதியைத்தேடுங்கள் (யாக். 1:20) மனுஷர் கோபம் தேவ நீதியை நடப்பிக்காது. எனவே மக்களிடத்தில் நாம் நடந்து கொள்ளும் விதமாய் நாம் நடக்க வேண்டும்.

உண்மை சத்தியத்தை அறிகிறவர்களாய் மாத்திரம் அல்ல ஆனால் அதை மாற்றுகிறவர்களாகவும் செயல்படுத்துகின்றது.

**வெளிச்சம் கர்த்தருக்கு பிரியமானதை கண்டறிகிறது.**

வெளிச்சமானது இயேசுவை பிரியப்படுத்தும் வகையில் நமக்குள் உள்ளது என்பதையும் அத்துடன் நமக்குள் நிலவுகின்ற, நம் வாழ்விலிருந்து நீக்கிப்போட வேண்டிய ஒழுக்க ரீதியான தவறுகள், பாவங்கள், எவைகள் என்றும் நாம் காண உதவுகின்றது.

**வெளிச்சம் பொல்லாங்கை வெளியாக்குகின்றது.**


கனியற்ற அந்தகார கிரியைகளுக்கு உடன்படாமல் அவைகளைக் கடிந்து கொள்ளுகிறது.

இயேசு கிறிஸ்துவின் சுவிஷேசத்தின் மூலமாய் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிற ஒவ்வொருவரும் இருளின்மீது வெற்றி கொள்ளுகிற உயிருள்ள சாட்சியாக மாறுகிறோம். இயேசு நமது வாழ்வில் தமது ஒளியை பிரகாசிக்க செய்கிறதற்கு இருளைத்துளைத்து நம்மை ஒளிக்கு கொண்டு வருகிறதற்கு போதுமான அக்கறைக்காண்பிக்கிறார்.


நீங்கள் கிறிஸ்துவராயிராவிட்டால் கிறிஸ்துவிடம் திரும்புங்கள். இருளான வாழ்விலிருந்து மனந்திரும்புங்கள். உங்கள் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்ஞானம் பெறுங்கள். இருளிலிருந்து ஒளிக்குள் கடந்து வாருங்கள்.

**கிறிஸ்துவின் வசன மாத இதழ்**

தேவைப்படுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு இன்றே ஓர் அஞ்சல் அட்டையில் உங்கள் தொளிவான முகவரியுடன் எழுதியனுப்பவும்.



The Editor
The Word of Christ
Post Box No.5
Batlagundu - 624 202
S.INDIA



**ஆன்மீக ஆலோசனை**

"நீ கர்த்தருக்குக் காத்திருந்து, அவருடைய வழியைக் கைக்கொள்; அப்பொழுது நீ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு அவர் உன்னை உயர்த்துவார்; துன்மார்க்கர் அறுப்புண்டு போவதை நீ காண்பாய்" (சங்.37:34)

## சந்திப்போம்! சிந்திப்போம்!

உரையாடல் - 42 D.எபிநேசர்

**யோனத்தான்:** ஸ்தோத்திரம் தாவீது! நேரடியாகவே விஷயத்துக்கு வந்துடறேன். காணிக்கையை ஏன் தொழுகையில் வச்சிருக்காங்க? பணம் தேவைப்படும்போது அப்பப்ப வசூல் பண்ணிக்கலாமே!

**தாவீது:** நல்ல யோசனைதான் யோனத்தான். ஆனா நாம முன்னாடியே பாத்திருக்கோம், தொழுகை என்பது நம்முடைய விருப்பத்தின்படியல்ல, தேவனுடைய சித்தத்தின் படியே செய்யப்படவேண்டும் மத்.7:21. காணிக்கை தேவனுடைய கட்டளையாக இருக்கிறது.

**யோனத்தான்:** எப்போதிலிருந்து தேவன் காணிக்கை கொடுக்கும்படி கட்டளை கொடுத்திருந்தார்.

**தாவீது:** காயீன் ஆபேல் காலத்திலிருந்தே காணிக்கை செலுத்த வேண்டும் என்கிற கட்டளை கொடுக்கப்பட்டிருந்தது. ஆதியாகமம் 4-ம் அதிகாரத்தில் இதுபற்றி தெளிவாகப் படிக்கலாம்.

**யோனத்தான்:** நானும் படித்திருக்கிறேன் காயீனுடைய காணிக்கையை தேவன் அங்கிரிக்கவில்லை. ஆபேலின் காணிக்கையை மட்டும் தேவன் ஏற்றுக்கொண்டார்.

**தாவீது:** இது ஏன் என்ற விளக்கம் உனக்குத் தெரியுமா?

**யோனத்தான்:** அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் நிறைய பேர் இதுபற்றி கேள்விகள் கேட்பதை பார்த்திருக்கிறேன். இப்பொழுது நானும் அதன் காரணத்தைத் தெரிஞ்சுக்க விரும்பறேன்.

**தாவீது:** Very Simple! தேவன் சொன்னபடி ஆபேல் காணிக்கையை செலுத்தினான். காயீன் அவ்வாறு செய்யவில்லை அவ்வளவுதான்.

**யோனத்தான்:** பிரத்யேகமாக இதைத்தான் செலுத்தவேண்டும் என்று தேவன் சொல்லவில்லையே! காயீன் விவசாயி, அதனால் அவன் காய்கனிகளைச் செலுத்தினான். ஆபேல் மேய்ப்பன் அதனால் அவன் ஆடுகளைச் செலுத்தினான். அப்புறம் எப்படி காயீனின் காணிக்கை தவறாகும்?

**தாவீது:** Ok இது பற்றி அடுத்த முறை பார்க்கலாமா?

மீண்டும் சந்திப்போம்.....

# பேலியாளின் மக்கள்

சிறுவர் பகுதி



***வேதவாசிப்பு: 1சாமு.2:12-17***

ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை. ஏலி யார் என்று தெரியுமா? அவன் தேவனுக்கு ஊழியம் செய்யும் ஆசாரியனாயிருந்தான். அவனுடைய பிள்ளைகளும் அந்த வேலையைச் செய்தார்கள். ஆனால் அவர்கள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையவில்லை. இன்றைக்கும் அப்பா வாத்தியார் என்றால் மகன் முட்டாள், அப்பா போலிஸ் அதிகாரி என்றால் மகன் திருடன், அப்பா டாக்டர் என்றால் மகன் நோயாளி என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். எல்லோரும் அப்படியல்ல ஒரு சிலர். அதைப்போல ஏலி ஆசாரியன் பிள்ளைகளோ கர்த்தரை அறியாதவர்கள்.

இவர்கள் ஜனங்களை நடப்பித்த விதம் என்னவென்றால், எவனாகிலும் ஒரு பலியைச் செலுத்துங்காலத்தில் இறைச்சி வேகும்போது, ஆசாரியனுடைய வேலைக்காரன் மூன்று கூறுள்ள ஒரு ஆயுதத்தைத் தன் கையிலே பிடித்துவந்து, அதினாலே, கொப்பரையிலாவது பானையிலாவது குத்துவான்; அந்த ஆயுதத்தில் வருகிறதையெல்லாம் ஆசாரியன் எடுத்துக்கொள்ளுவான்; அப்படி அங்கே சீலோவிலே வருகிற இஸ்ரவேலருக்கெல்லாம் செய்தார்கள். கொழுப்பைத் தகனிக்கிறதற்கு முன்னும், ஆசாரியனுடைய வேலைக்காரன் வந்து பலியிடுகிற மனுஷனை நோக்கி: ஆசாரியனுக்குப் பொரிக்கும்படி இறைச்சி கொடு; பச்சை இறைச்சியை அல்லாமல், அவித்ததை உன் கையிலே வாங்குகிறதில்லை என்பான். அதற்கு அந்த மனுஷன் இன்று செய்யவேண்டியபடி முதலாவது கொழுப்பைத் தகனித்துவிடட்டும்; பிற்பாடு உன் மனவிருப்பத்தின்படி எடுத்துக்கொள் என்று சொன்னாலும்; அவன் அப்படியல்ல, இப்பொழுதே கொடு, இல்லாவிட்டால் பலவந்தமாய் எடுத்துக்கொள்வேன் என்பான்.

ஆதலால் அந்த வாலிபரின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதாயிருந்தது; மனுஷர் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணினார்கள். பார்த்தீர்களா உற்சாகமாகக் கர்த்தருக்கு காணிக்கை கொடுக்கக் கூடியவர்கள்கூட வெறுப்பாய் எண்ணும்படி நடந்துகொண்டார்கள். இவர்களுடைய பாவம் கர்த்தருடைய பார்வையில் மிகவும் பெரிதாக இருந்தது. நீங்கள் இவ்விதமாக ஊழியம் செய்கிறவர்களைப் பார்த்து, ஏலியின் குமாரர்களுடைய பாவத்தை அவர்களுக்கு நினைப்பூட்டி எச்சரிப்பு செய்யுங்கள். அவர்கள் தேவ கோபத்திற்கு தப்பிக்கொள்ளட்டும்.

**மனப்பாட வசனம்:**

**"மாறுபாடுள்ள இருதய முடையவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்; உத்தம மார்க்கத்தாரோ அவருக்குப் பிரியமானவர்கள்" (நீதி.11:20).**

## வேத அறிவுப் போட்டி எண்-67

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும்.

1. இரண்டு வேவுகாரரை கயிற்றினாலே ஜன்னல் வழியாய் இறக்கிவிட்ட பெண் யார்?
2. உறைந்த மழையின் வெண்மைபோன்ற குஷ்டரோகியானவள் யார்?
3. இஸ்ரவேலுக்கு எந்த வருஷம் யூபிலி வருஷம்?
4. நான் அந்நிய தேசத்திலே பரதேசியானேன் என்றும் என் பிதாவின் தேவன் எனக்குத் துணை நின்று பார்வோனின் பட்டயத்துக்கு என்னைத் தப்புவித்தார் என்றும் சொல்லி தன் பிள்ளைகளுக்கு என்ன பெயரிட்டிருந்தான்? அவன் யார்?
5. பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும் கோடைகாலமும், மாரிகாலமும், பகலும், இரவும் என்ன செய்வதில்லை என்று எவர் தம்முடைய உள்ளத்தில் சொன்னார்?
6. நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்திலே அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தவன் யார்?
7. தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவரா யிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானவன் யார்?
8. தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் எப்படியும் இருக்கிறது?
9. புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து எதைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்?
10. ஆரோனைப்போலத் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் என்ன செய்கிறதில்லை?

## நடப்புச் செய்திகள்

① இதற்குமுன் இல்லாத அளவுக்கு இந்தியா - அமெரிக்கா இடையேயான உறவில் நெருக்கம் ஏற்பட்டுள்ளது என்று புஷ் கூறியுள்ளார்.

② தேனி மாவட்டத்தில் புதிதாக வாக்காளர் பட்டியலில் சேர்க்க விண்ணப்பித்த வாக்காளர்களில் 22 ஆயிரம்பேரின் மனு போலியானது என அதிகாரிகள் கண்டு பிடித்துள்ளனர்.

③ சென்னை - தூத்துக்குடி இடையே விமான போக்குவரத்தை ஏப்ரல் 1-ந் தேதி ஏர் டெக்கான் நிறுவனம் தொடங்குகிறது.

④ அண்டார்ட்டிக்காவின் பணி மண்டலம் கடந்த 3 ஆண்டுகளாக சுருங்கிவருகிறது.

⑤ கொடைக்கானல் கிறிஸ்தவ கல்லூரியின் விளையாட்டு விழாவில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுக்கோப்பைகள் வழங்கப்பட்டது.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202. and Printed by R. Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202. Editor : B. Arjunan.

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2006-2008 Licensed to Post without prepayment
License No. TN/WPP-25/SR/2006-2008 Posted at Batlagundu Post Office on 10th March 2006

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கின்றோம்.

## கிறிஸ்துவின் சபை



17.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202 திண்டுக்கல் மாவட்டம்
போன் : 04543 - 263278 செல் : 9443558041
E-mail : thewordofchrist@sancharnet.in


"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32)

**கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை**



திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி
ஆகிய கிழமைகளில் உங்கள் WIN TV-யில் ஒவ்வொரு வாரமும்
காலை 6-15 மணிமுதல் 6-30 மணிவரை பாருங்கள்

மற்றும்



உங்கள் வானொலியில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்
(கொழும்பு சர்வதேச வானொலி) MW 873 Khz-ல்
ஒவ்வொரு வியாழன் காலை 7-15 மணி முதல்
7-30 மணிவரை கேளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**THE WORD OF CHRIST**
P.O. Box. 5, Batlagundu - 624 202 S. India ✆ 04543 263278 Mobile : 94435 58041

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் ஆண்டு சந்தா
இந்தியா ரூ. 50/- வெளிநாடு ரூ. 500/- தனிப்பிரதி ரூ. 5/-

**Monthly Magazine**

To

From

Editor
THE WORD OF CHRIST
P.O. Box. No. 5
Batlagundu - 624 202
S. India